// மிக மிக அவசரம் // தனிக்கவனம் //

வேலூர்மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.1069/ ஆ2/2023 நாள்.21.07.2023

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – இலவச பேருந்து பயண அட்டை – 2023 – 2024ஆம் கல்வி ஆண்டு – அரசு / அரசு நிதியுதவி பெறும் / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் – மாணவ / மாணவிகளுக்கு இலவச பேருந்து பயண அட்டை விண்ணப்பங்களை சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்க கோருதல் – தொடர்பாக

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) சென்னை.6. அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.23133/இ/இ2/2023 நாள் 20.07.2023.

-----

பார்வையிற் காணும் செயல்முறைகளுக்கிணங்க வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு / அரசு நிதியுதவி பெறும் / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகளுக்கு 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டிற்கான இலவச பேருந்து பயண அட்டை பெற்று வழங்கிட TNSED Schools இல் App Login உள்ளீடு செய்ய தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் மாணவர்களின் நலன் கருதி இவ்வாண்டும் பழைய நடைமுறையினை ( OffLine) பின்பற்றிட அறிவுறுத்தப்படுகிறது.

எனவே 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டிற்கு அரசு / அரசு நிதியுதவி பெறும் / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகளுக்கு 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டிற்கான இலவச பேருந்து பயண அட்டை பெற மாணவ / மாணவியர்களின் புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பங்களை பெற்று பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மண்டல அரசு போக்குவரத்து கழக தலைமை கழகத்தில் 31.07.2023க்குள் சமர்ப்பித்திட நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(P.T.O)

மேலும் இப்பொருள் சார்பாக வேலூர், மண்டல அரசு போக்குவரத்து கழக தலைமை கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை விவரங்களை **Google Sheetல்** பூர்த்தி செய்யுமாறு அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பு.

மேலும் இப்பொருள் சார்பாக ஏற்படும் சந்தேகங்களுக்கு கீழ்காணும் வேலூர் அரசு போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த அலுவலர்கள் கைபேசி எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

1. திரு.முருகேசன் – 9486622033
2. திரு.யுவராஜ் – 9894437443

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

இணைப்பு. Google Sheetல்

பெறுநர்

சார்ந்த தலைமை ஆசிரியர்கள்,
அனைத்து வகை அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல்.

1. சென்னை.பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது.
2. மேலாளர்,
   மண்டல அரசு போக்குவரத்து கழக தலைமை கழகம்,
   வேலூர்.